செ.வெ.எண் : 20 / ஆகஸ்ட் நாள் : 09.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

# குழந்தைகளுக்கான இல்லங்கள் மற்றும் விடுதிகள் "தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டம் 2014"-இன் கீழ் பதிவு செய்திருக்க வேண்டும்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அறக்கட்டளைகள், சங்கங்கள், தொண்டு நிறுவனம், தனியார், மதநிறுவனங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றால் நடத்தப்படும் குழந்தைகளுக்கான தங்கும் விடுதிகள், இல்லங்கள் ஆகியவற்றை "இளைஞர் நீதிச்சட்டம் 2015" "தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டம் 2014" ஆகிய சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும். செய்தி வெளியான நாளிலிருந்து 6 மாத காலத்திற்குள் விண்ணப்பித்து உரிமம் அல்லது பதிவு பெற்றுக் கொள்ள வேண்டும். சட்ட நடைமுறைகளை பின்பற்றாத விடுதிகள் மற்றும் இல்லங்கள் ஆகியவற்றை மூடுவதற்கு உடனே நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

18 வயதிற்குட்பட்ட குழந்தைகள் இல்லங்கள் மற்றும் விடுதிகள் நடத்துவோர் இராமநாதபுரம் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தில் விண்ணப்பத்தை பெற்றுக் கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு 04567-231098 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்.

18 வயதிற்கு மேற்பட்ட மகளிர் இல்லங்கள் மற்றும் விடுதிகள் நடத்துவோர் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் உள்ள மாவட்ட சமூகநல அலுவலகத்தில் விண்ணப்பம் பெற்றுக் கொள்ளலாம். கூடுதல் தகவலுக்கு 04567-231098 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**